# கப்பலில்வரும் கடும் நோயாளிகளுக்கு பராமரிப்பு இல்லை

கப்பல் மூலம் கொழும்புக்கு செல்லும் கடுமையான நோயாளிகளுக்கு எந்தவித பராமரிப்புச் சேவையும் வழங்கப்படுவதில்லை என அந்த நோயாளிகள் தெரிவிக்கின்றனர். கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை வந்த 'குமண' கப்பலில் திருகோணமலையில் வைத்து ஏற்றப்பட்ட நோயாளி ஒருவர் கால் சறுக்கியதால் விழுந்து கால் முறிந்த நிலையில் எவ்வித முதலுதவியும் அளிக்கப்படாமல் வசதிகள் அற்ற கட்டிலில் படுக்க வைக்கப்பட்டார் இவர்களைப் பொறுப்பேற்ற சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவோ, நீரோ வழங்க முன்வரவில்லை. கால் முறிந்த நோயாளியின் பரிதாபகரமான நிலைமையைக்கண்டு கப்பலில் கூட வந்த இரு அரச உயர் அதிகாரிகள், அவருக்கு தண்ணீர் கொடுத்தனர். ஆனால் உணவு வழங்க முடியவில்லை, பருத்தித்துறைக்கு காலை 9 மணியளவில் வந்த இக் கப்பலிருந்து மாலை வரை நோயாளிகளும், உயர் அதிகாரிகளும் இறக்கப்படவில்லை. கப்பலில் வந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் வானொலித் தொடர்பு சாதனம் மூலம் தொடர்பு கொண்டதால் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 112 பிரமோதூத பங்குனி 05 (19-03-1991) செவ்வாய்

## மடு தேவாலய அகதிகளுக்கு மாதா கையசைத்து அபயம்!

மடு மாதா தேவாலயத்தில் இருந்து அகதிகளை வெளியேற வேண்டும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன அறிவித்த மாசி 28-ஆம் திகதிக்கு மறு நாள் மடுத் திருப்பதியில் ஒரு அதிசயம் நிகழ்ந்ததாக ''இந்து'' பத்திரிகை தெரிவித்துள்ளது. தேவாலய முன்றலில் உள்ள கன்னி மரியாளின் திருச்சொரூபம் பங்குனி 1-ஆம் திகதி மாலை 7 மணியளவில் அசையத் தொடங்கியதாகவும் மாதா தனது கரங்களை அசைத்து அருள் பாலித்து பாதுகாக்கும் வகையிலான —04 ஆம் பக்கம் பார்க்க

# இனவிகிதாசாரமுறையை நீக்க அரசுதயார்

# உயர்நீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலி

நியமனங்கள். பதவியுயர்வுகளைப் பொறுத்தவரையில் தற்போது நடைமுறையில் உள்ள இனவிகிதாசார முறையை நீக்க அரசு ஆலோசித்து வருவதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவியுயர்வு இனவிகிதாசார அடிப்படையினால் மறுக்கப்பட்டதாக அங்கப்பகுதியைச் சேர்ந்த தமிழ் அதிகாரி ஒருவர் அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடர்ந்ததும், உயர் நீதிமன்றம் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்ததும் தெரிந்ததே.

இதேவேளை தபால், தந்தித்தொடர்பு ஊழியர் சங்கம் இந்த இனவிகிதாசார முறை பற்றி ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் அரசின் கொள்கையினால் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் இனவேற்றுமை நிலவுவதாகவும் திறமை வாய்ந்த அதிகாரிகள் அவர்களுக்கு உரிய பதவியுயர்வு மறுக்கப்படுவதால் விரக்தியடைவதாகவும்

4 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளம் அகதிகள் வீடு திரும்ப முடியாத நிலை

மாங்குள இராணுவ முகாமைச் சூழ்ந்த பல குடும்பங்கள் இன்னமும் அகதிகளாகவே இருந்து வருகின்றனர்.

இப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் முகாமைச் சூழ்ந்துள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்து நிர்மூலமாக்கப்பட்டதினால் சம்பந்தப்பட்டவர்கள் தமது சொந்தக் குடியிருப்புகளை இழந்து இன்னமும் அகதி வாழ்க்கையிலேயே இருந்து வருகின்ற

4 ஆம் பக்கம் பார்க்க

### நிலாவெளி

## பஸ்நிலையக் கண்ணி 2 சிப்பாய்கள் பலி

நிலாவெளி பஸ் நிலையத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்கனவே வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கிய இரு இராணுவச் சிப்பாய்கள் பலியானார்கள். கடந்த ஞாயிறன்று இச்சம்பவம் நடைபெற்றது.

## மண்டூர் கோவில் கும்பாபிஷேகம் அகதிகளை வெளியேறப் பணிப்பு

மண்டூர் முருகன் கோவிலில் உள்ள அகதிகளை வெளியேறுமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளதாம். இம் மாத இறுதியில் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாலேயே இவ் வெளியேற்ற பணிப்பு விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

16-ம் கொலனி ...

## அமைச்சரவை மாற்றம் பற்றி

### முல்லைத்தீவில்

## உபஉணவுப் பயிர்ச்செய்கை இம்முறை பாதிக்கப்பட்டது

முல்லைத்தீவுப் பகுதிகளில் மிளகாய், வெங்காயம் மற்றும் உபஉணவுப் பயிர்ச்செய்கைகள் இம்முறை குறைந்துள்ளன.

இப்பகுதியில் நீண்ட நாளாக ஏற்பட்டு வரும் உரவகைகள், எரிபொருள்கள், விதைகளுக்கான தடையினாலும் பணப்புழக்க நெருக்கடி நிலையாலும் இப்பகுதியில் வெங்காயம் மிளகாய்ச் செய்கைகள் இம்முறை குறைவடைந்துள்ளன.

இராணுவ நடவடிக்கையினால் குறைந்தளவு ஏக்கர் விஸ்திரணங்களிலேயே காலபோக வேளாண்மை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (38)

## தென்தமிழீழத்தில் 12 பொதுமக்கள் படுகொலை

கிழக்கில் கடந்த வாரம் 12 பொதுமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருமலையில் பள்ளவெளியில் க. நாகராசா 40) சம்பூர் V. ஞானம் (கனி) மட்டக்களப்பு) ஆகியோரும் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

மட்டக்களப்பில் இலந்தைக் கந்தை, மரவெட்டைக்குளம், பள்ளவெளி, பட்டவெளிபுரம், நல்லூர், மட்டக்களி ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 10 பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். இதில் 4 பேரின் உடல்கள் அடையாளம் காணப்படவில்லை. (71)

## மட்டக்களப்பு டிப்போவில்

## மட்டு ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை மீண்டும் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. கடந்த 14-ம் திகதி பொலநறுவை மன்னம்பிட்டி அருகே ரயில் பாலம் தகர்க்கப்பட்டதையடுத்து கடந்த நான்கு நாள்களாக ரயில் சேவை துண்டிக்கப் பட்டிருந்தது.

## ஒருதேங்காயில் நாலு கன்றுகள்

தொல்புரம் கிழக்குப் பகுதியில் பா. நாகேஸ்வரன் என்பவரது வீட்டில் ஒரு தேங்காயில் நான்கு தென்னங் கன்றுகள் முளைத்துள்ளன.

இந்த தென்னங்கன்று ''வத்தாளி'' இனம் எனவும் கூறப்படுகின்றது. பலர் இதனை அதிசயமாகப் பார்வையிட்டுச் செல்கின்றனர். (ப-1)

## ஹாட்லி கல்லூரியின் 150வது ஆண்டுமலர்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150-வது ஆண்டு மலரை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளைக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது. (15)

## இன்று தபால் விநியோகம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு குமண கப்பலில் ...

தெரிவிக்கப்படுகிறது:

16-ம் கொலனி, சவளக் கடை, மலையர்கட்டு பகுதியைச் சேர்ந்த அகதிகளே இங்கு தங்கியிருந்தனர். தற்போது அப்பகுதிகளில் நிலவும் இராணுவ நடவடிக்கைகளி

4 ஆம் பக்கம் பார்க்க

# அமைச்சரவை மாற்றம் பற்றி அமைச்சருக்கே தெரியாது

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் பற்றி தனக்கே எதுவும் தெரியாது என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளரிடம் கூறினார்.

அமைச்சரவையில் மாற்றம் பற்றி எதுவுமே ஆராயப்படவில்லை எனவும் அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்த பின்னர் அதிகாரிகளின் மூலமாகவே அவர்

4 ஆம் பக்கம் பார்க்க

# வன்னியிலும் நெருப்புக் காய்ச்சல் பரவும் அபாய நிலை

வன்னிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டாலும், சுத்தமற்ற குடிநீரினாலும், கடும் உஷ்ண நிலையாலும் நெருப்புக் காய்ச்சல் பரவும் அறிகுறிகள் தென்படுவதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தகுந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கைக் கொள்தல் மூலம் இந்நோயிலிருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும். இப்பகுதிகளில் இந்நோய் பரவுவது இல்லையெனவும் சுகாதாரப் பகுதி தெரிவிக்கிறது.

# உடுப்பிட்டி பல நோ.கூ.சங்கத்தில் சகல பொருள்களும் விற்பனை

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை நியாய விலைக்கு தாராளமாக விற்பனை செய்து வருகிறது.

அரிசி, மா, சீனி, பூடு, மல்லி, தேங்காய்எண்ணெய், சோயா மீட் குழந்தைகளுக்கான லக்டோஜன் பால்மா போன்ற பொருள்களை கிளைச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

4 ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பு அகதி முகாம்கள் மதிப்பாய்வு நடைபெறுகிறது

கொழும்பில் தங்கியுள்ள அகதிகளின் நிலவரங்கள் குறித்து சமூக சேவைகள் திணைக்களம் மதிப்பாய்வு ஒன்றை நடாத்தி வருகிறது.

இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் இவர்

4 ஆம் பக்கம் பார்க்க

# மட்டக்களப்பு டிப்போவில் சம்பளப்பணம் கொள்ளை

மட்டக்களப்பு நகரில் உள்ள இழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போவில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்களுடன் சைக்கிளில் வந்த இருவர் காசாளரிடம் இருந்து இப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காக வங்கியில் இருந்து கொண்டுவரப்பட்ட பணமே கொள்ளையடிக்கப்பட்டது. (38)

# ரஞ்சன் கொலை தொடர்பாக ஜே. வி. பி. உறுப்பினர் கைது

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன படுகொலை தொடர்பாக ஜே. வி. பி. இயக்க உறுப்பினர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னர் கைதாகி விடுதலையான ஜே. வி. பி. இயக்க இளைஞர்கள் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

4 ஆம் பக்கம் பார்க்க

# 14 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படை பிடித்தது

இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடித்த போது பிடிபட்ட இலங்கை மீனவர்கள் பதிநான்கு பேரையும் விடுவிக்குமாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் என். என். ஜாவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25-ம் திகதி நீர்கொழும்பு, இரைபம் பகுதி

4 ஆம் பக்கம் பார்க்க

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு கும்பகப்பலில் வெளியூர்த் தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

இவ் தபால் பொதிகள் இன்று முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோக சேவைகள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# இப்படியும் நடக்கிறது

1980, 1981 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாகச் சான்றிதழ்கள் இல்லாது பெரும்பேதுமுற்றாள்களுடன் இருந்த பரீட்சார்த்திகள் தமக்குரிய சான்றிதழ்கள் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைந்தனர்

1980, 1981 ஆம் ஆண்டு

4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக தேர்தல் களம்

### ''போங்கய்யா, நான்தான் சொல்கிறேனே''

அ தி மு. க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் போயஸ் கார்டனில் பத்திரிகையாளர்கள் அவமதிக்கப்பட்டனர். மத்திய அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தபோது விவரங்களைத் தெரிந்துகொள்ள பல நிருபர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் போயஸ் கார்டன் சென்றிருந்த போது அவர்களைக் காவலாளி தடுத்து நிறுத்தி விட்டார்.

''உள்ளே சென்று தலைமைக்கழக நிர்வாகி துரையிடமோ அல்லது மேடத்தின் உதவியாளரிடமோ போய் நிருபர்கள் வந்திருப்பதாகச் சொல்லுங்க'' என்று சில நிருபர்கள் சொன்னதற்கு'' போங்கய்யா, நான்தான் சொல்கிறேனே போதாதா அம்மா பார்க்கமாட்டாங்க எல்லாம் எனக்குத் தெரியும். உள்ளே போய் நான் சொல்ல வேண்டியதில்லை நீங்க போங்க' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகப் பதில் சொல்லி, கதவைச் சாத்திவிட்டார் காவலாளி இப்படி சென்னை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

### 'அம்மையாருக்கு' காலை வாரிய பூனை

ஜெயலலிதாவின் தனிப்பட்ட உதவியாளராக (பெர்சனல் அஸிஸ்டென்ட்) சிறுவன் ஒருவன் நியமிக்கப்பட்டுள்ளான். போலிஸ், மற்றும் இரகசிய புலனாய்வுத்துறையிடம் 'போய் சொல்லிடபிள்கள்' இருப்பது பேல் ஜெயலலிதாவும் இச் சிறுவனை தனக்குத் தனிப்பட்ட உதவியாளராக நியமித்துள்ளார். இதற்கு முன் உதவியாகத் தனக்கிருந்த பூனைப்படை உதவியாளர்கள் மூலமாகக் கட்சி மற்றும் தனது சொந்த விஷயங்கள் 'வெளியே 'லீக்' ஆனதாக ஜெயலலிதா எண்ணினாராம். அதனால்தான் இம் மாற்றம் என்று அவரோடு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தாமரை இலைத் தண்ணீராக .....

தி. மு. க அரசு கலைக்கப்பட்டதும் அ. தி. மு. க வில் பழைய ஜானகி அணியினர் படு சுறுசுறுப்பாகி விட்டனர். தேர்தல் டிக்கட்டுக்காக அவர்கள் பம்பரம்போல் சுழன்று கொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதா அணியும், ஜானகி அணியும் இணைந்து அ. தி. மு. க மீண்டும் பரிணாம வளர்ச்சி பெற்றது. எனினும் இரண்டு அணியினருமே தாமரை இலைத் தண்ணீராகத்தான் தங்களது உறவுகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## அந்தியேட்டி அழைப்பு



# மக்கள் வங்கியின் அந்தஸ்துக்கு இணையாக கூட்டுறவுசங்கங்களை தரமுயர்த்த நடவடிக்கை!

மக்கள் வங்கியின் அந்தஸ்துக்கு பல நோ. கூ. சங்கங்களை புனருத்தாரணம் செய்வது பற்றி உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

பல நோ. கூ. சங்க ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படுவதுடன் வங்கி ஊழியர்களுக்குள்ள சலுகைகள் இவர்களுக்கும் வழங்கப்பட உள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாவட்ட மட்டத்தில் உள்ள எல்லாச் சங்கங்களுக்கும் தலைமைக் காரியாலயம் ஒன்றை ஏற்படுத்துவதுடன் காரியாலய உத்தியோகஸ்தர்கள் மாவட்டத்திலுள்ள எல்லாக் கிளை அலுவலகங்களிலும் பணி புரியக் கூடியதாக இவ் அமைப்பு மாற்றப்படவுள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (66)

### சென்ஜோன்ஸ் அங்கத்தவர்களிடையே வீட்டுத் தோட்டப் போட்டி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் (சர்வதேச) படையின் யாழ் மாவட்டப் பிரிவு தமது அங்கத்தவர்களை உணவு உற்பத்தியில் ஊக்குவிக்கும் முகமாக வீட்டுத் தோட்டப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இப் போட்டி இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் பொருளாதார மேம்பாட்டிற்கும், உணவுத் தன்னிறைவுக்கும் எமது பங்களிப்பை ஆற்றும் வகையிலும், எமக்கு நாமே உதவும் வகையிலும் எமது அங்கத்தவர்கள் மத்தியில் நடாத்தப் படுகின்றது என்று படையின்வடமாகாண ஆணையாளர் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பிரிவு உத்தியோகத்தர் ஊடாக பிரதேச ஆணையாளருக்கு எழுத்து மூலம் விண்ணப் பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும், இப் போட்டி குறுகிய கால குழுத் தொழிற்பாடு. நீண்ட கால குழுத் தொழிற் பாடு. குறுகிய கால தனிநபர் தொழிற்பாடு. தனிநபர் நீண்ட காலத் தொழிற்பாடு என்று நான்கு பிரிவுகளாக நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (13)

### கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் கருத்தரங்கத் தொடரில் பேராசிரியர் சு. சுசீந்திரராசாவின் ''பண்டிதமணியின் பேரும் புகழும் வந்தவாறு'' என்னும் ஆய்வுக் கட்டுரை பற்றிய கருத்தரங்கு இருபத்திரண்டாம் திகதி வெள்ளி பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது பொருளியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் இக் கருத்தரங்கிற்குப் பேராசிரியர் கா சிவத்தம்பி தலைமை தாங்கவுள்ளார்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

ஆசிரியர்,
முரசொலி.

காலத்தின் தேவையறிந்து பணியாற்றும் முரசொலியின் பாங்கிற்கு 11. 3 91 அன்று பிரசுரமான முன்னைநாள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி ச சின்னப்பு அவர்களின் 'சிக்கனச் சமையல் செய்ய......' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கருத்துக்களும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இக் கருத்துக்களை ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் எட்டும் வகையில் கையடக்கமாக அச்சிட்டு உதவினால் ''முரசொலி'' பேருதவி ஒன்றைச் செய்ததாக அமையுமென நம்புகிறோம்.

முரசொலிக்கும், செல்வி ச. சின்னப்பு மற்றும் பேட்டி கண்ட வி. பி. அவர்களுக்கும் எமது நன்றி.

யாழ்ப்பாணம் க கனகராசா
அதிபர் மில்க்வைற்

(வாசகர்களிடமிருந்து சிக்கனச் சமையல் பற்றிய கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம் ஆ-ர்)

### பாகிஸ்தானில் பி.பி.ஸி நிருபர் தாக்கப்பட்டார் பிரிட்டன் கடும் கண்டனம்

பாகிஸ்தானில் உள்ள பி.பி.ஸியின் நிருபர் ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் தாக்கப்பட்டமையை பிரிட்டிஷ் அரசு கண்டித்துள்ளது.

கராச்சியில் அவரது வீட்டில் வைத்து இந்த நிருபர் ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் தாக்கப்பட்டதாகவும் இச்சம்பவத்தில் அவரது குடும்பத்தினர் இருவரும் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிருபருக்கு அந்த ஆயுதக் கோஷ்டியினரால் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன.

### பாதுகாப்புக்கு பதுங்கு குழிகள்

ஸ்ரீலங்கா அரசின் கண்மூடித்தனமான வான் தாக்குதலில் இருந்து பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு பதினொரு பதுங்கு குழிகளை கல்வியங்காடு வர்த்தகர்கள் தமது செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். (53)

### வைத்தியசாலையில் இடநெருக்கடி!

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இட நெருக்கடி காரணமாக மனநோயாளர்கள், பிரசவத் தாய்மார்கள் தவிர்ந்த ஏனைய நோயாளர்கள் வார்ட்டுக்களில் தங்க வைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது இதனால் இவர்கள் பிறவைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். (30

### பயிலுநர்க்கு படி கிடைக்கும்

ஏப்ரல் மாத சம்பளத்துடன் நிலுவையும் சேர்த்து பயிலுநர் ஆசிரியர்களுக்கு உரியதான விசேட படி கிடைக்கவுள்ளது. (78)

## செய்திச் சிதறல்கள்

### புதிய பிரேரணைகள்

நாவலர் தர்ம பாதுகாப்புச் சபை அண்மையில் மூன்று பிரேரணைகளை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

நாவலர் சிலை சைவப் பெருமக்களின் மனதில் நிலைத்திருக்கவும், எதிர்காலச் சந்ததியினர் அறிந்திருக்கவும், அறிய ஆவலை ஊட்டவும், அதனை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்பாகவுள்ள நாவலர் மணி மண்டபத்தில்

### சரஸ்வதி வித்தியாலய அபிவிருத்திச் சங்கம்

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் திருமதி கோமளம் அம்பலவாணர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## 3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர் வி. கணபதிப்பிள்ளை

(அம்பாள் கிரோசரி, கிளிநொச்சி)

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
| --- | --- |
| 23 - 04 - 1929 | 18 - 02 - 1991 |

எமது அன்புத்தெய்வமே! உமது பிரிவால் செய்வதறியாது கலங்கி நிற்கிறோம். உமது ஆத்மா சாந்தியடைய புற்றச்சித்தி விநாயகரைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் (20. 03 91) புதன்கிழமை புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயத்திலும் சபிண்டீகரணம் வீட்டிலும் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

புற்றளை,
புலோலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

03084

நிறுவ ஆவன செய்தல் அல்லது சிறிய அளவிலான சிலையொன்றை வைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல், நாவலர் எழுதிய முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பால பாடங்கள், இலக்கணச் சுருக்கம் முதலியவற்றை இயன்றளவு மலிவுப் பதிப்பாக அச்சிட்டு வெளியிடலின் அவசியத்தை வலியுறுத்தல், இந்நூல்களை அடிப்படையாக வைத்துச் சிறு அளவிலான போட்டிகளை மாணவர் மத்தியில் நடாத்தி பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்தல் என்பன அவற்றுள் அடங்கிய முக்கிய அம்சங்களாகும்.

தலைவர்: திருமதி சேமலம் அம்பலவாணர், உப-தலைவர்- திரு. வி. அம்பலவாணர், செயலாளர் ச. நடராசா, உப-செயலாளர் திரு. நா. நடராசா, பொருளாளர், திருமதி பண்டிதை சி. தையல்நாயகி.

15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (12)

### பூநகரியில் கர்ப்பவதிகள் கிளினிக்

பூநகரி - வினாசியோசண்டக் கிராமத்தில் இயங்கும் முதலுதவி நிலையத்தில் கர்ப்பவதித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்குமான கிளினிக் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவை நடைபெறவுள்ளது. (ப-35)

## இசை நடனநிகழ்ச்சி

யாழ் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகவின் கலைமன்றம் வழங்கும் இசை, நடனநிகழ்ச்சி பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 23 ஆம் திகதிகாலை இடம்பெறவுள்ளது.

நிகழ்ச்சியில் வாத்திய விருந்து, வாய்ப்பாட்டு, இருவயலினிசை, நடனம் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக கவின்கலை மன்றம் அறிவித்துள்ளது

நிறைவு செய் நிகழ்ச்சியாக சி பத்மலிங்கம் அவர்களின் பாட்டுக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

| மலர்வு | | உதிர்வு |
| --- | --- | --- |
| 31 | | 21 |
| — | | — |
| 12 |  | 03 |
| — | | — |
| .960 | | 1988 |

## திருமதி உமாபதி விக்னேஸ்வரன்

திதி : 19 - 03 - 1991

எமது அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்த நீர் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர். உமது அன்பும் பாசமும் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும். உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை வீதி,
நாவற்குழி,
கைதடி.

உமது பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா, அண்ணி

03082

# ஒல்லாந்திலிருந்து திரும்பிய 25 தமிழ் இளைஞர் கட்டுநாயக்காவில் ரகஸிய பொலிஸாரால் கைது!

ஒல்லாந்திலிருந்து கொழும்பை வந்தடைந்த இருபத்தி ஐந்து தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகஸியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருபத்தி ஐந்து இளைஞர்களும் வேலை வாய்ப்பைத்தேடி சில மாதங்களுக்கு முன்னர் ஒல்லாந்திற்குச்சென்றிருந்தனர். அங்கு ஒல்லாந்து குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்ட இவர்கள் பின்னர் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

இரகஸியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இந்தத்தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருவதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சவுதியில் வெளிநாட்டுத்தொழிலாளர்களுக்கு போர்க்கால விசேட கொடுப்பனவு

மத்திய கிழக்கு நாடுகளில் போர்க்காலத்திலும்போதும்வெளியேறாது கடமை புரிந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு போர்க்கால உதவிப்படிகள் வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

சவுதி அரேபியாவில், வளைகுடா யுத்தம் நடைபெற்ற போது வெளியேறாது தொடர்ந்து தங்கியிருந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டதாகவும் அறியப்படுகின்றது. (74)

## ஆசிரியருக்கு 1500 ரூபா முற்பணம் இம்மாத சம்பளத்துடன் கிடைக்கும்

கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விழா முற்பணம் தற்போது 1500 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டே முன்பு 1000 ரூபாவாக இருந்த இவ்விழா முற்பணம் 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட இருக்கும் வட்டி இல்லாத இவ் விழா முற்பணத்தினைப் பெற விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து கல்வித் திணைக்களத்தால் விருப்பக் கடிதங்கள் கோரப்பட்டுள்ளன. (ப-10)

## புத்தளம் நகர வீதிகளில் தமிழர்களுக்கு விரோதமான சுவரொட்டிகள்

புத்தளம் பகுதியில் உள்ள முக்கிய வீதிகளில் தமிழர்களுக்கு எதிரான வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம் காடையர்கள் இந்த வகையில் தமிழர்களுக்கு எதிராக இப்பகுதியில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க புத்தளம் பகுதியிலுள்ள பல இந்து ஆலயங்கள் திட்டமிட்ட அடிப்படையில் சேதமாக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சித்த மருத்துவர் சங்கம் உதயம்

அண்மையில் கைதடியில் உள்ள யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் சித்த மருத்துவ அபிவிருத்திக்காக ஓர் சங்கம் அமைக்கப்பட்டது.

வைத்தியர்கள் நுஜன் விருப்பிகள் உட்பட பதினாறு அங்கத்தவர்கள் இச்சங்கநிர்வாகக் குழுவில்இடம்பெறுகின்றனர்.

இச்சங்க நிருவாகிகளாகத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

தலைவர்-டொக்டர்எஸ் சபாநாதன் உபதலைவர்- டொக்டர்பி.பிலிப்செயலாளர்டொக்டர். ஐ. ஜெபநாமகணேசன், உப செயலாளர்-டொக்டர் ஆர். கனகலிங்கம், பொருளாளர்-டொக்டர் எஸ். சுந்தரலிங்கம், பத்திராதிபர் - டொக்டர் பி. மங்களேஸ்வரி

நிர்வாக சபை உறுப்பினர்கள்-டொக்டர்எஸ் சுந்தரம், டொக்டர் கே.பாலகிருஷ்ணன், டொக்டர் ஏ உமாகாந்தன், டொக்டர் எஸ். ஏ. குஞ்சிதபாதம், டொக்டர் என் ஸ்ரீவிக்கினேஸ்வரன், டொக்டர்எஸ். ஜே ஆமலநாதன், பி. செல்லத்துரை (கூட்டுறவுத் தலைவர், கைதடி), கே. சிவராஜா (சித்த மருத்துவத் துறை மாணவர் மன்றத் தலைவர்)

### நிரந்தர அதிபர்கள்

31.12.88 ஆந் திகதிக்கு முன்பாக மூன்று வருடங்களுக்குக் குறையாமல் அதிபர் கடமையை ஆற்றிய ஆறு அதிபர்களுக்கு வேலணை கோட்டத்தில் 01.06.89 ஆந் திகதி தொடக்கம் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (78)

## இராணுவ நடவடிக்கைகளினால் மட்டு.பல்கலைக் கழகத்திற்கு அதிக சேதம்

கடந்த ஜூனுக்குப் பின்னர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் கிழக்கு பல்கலைக் கழகத்திற்குஐந்து கோடிரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணிப்பிடப் பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் இப் பல்கலைக் கழக கட்டிடங்கள் சில சேதமடைந்துள்ளதுடன் தளபாடங்களும், ஆய்வுகூட உபகரணங்களும் சேதமடைந்தமை தெரிந்ததே.

## சங்கானையில் கலந்துரையாடல்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கானையில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பொறுப்பாளர் குகதாசன் மாஸ்டர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (12)

## தென்பகுதியில் குட்டிப் பொதுத்தேர்தல் 237 சபைகளுக்கு 3542 உறுப்பினர் தெரிவு

தென்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட இதுவரை வேட்பு மனுக்களை சமர்ப்பித்தவர்களில் அனேகமானோர் இளைஞர்களாகவே உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஒரே நாளில் உள்ளூராட்சி சபைகளுக்கான இந்த குட்டிப் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது

மொத்தம் 237 மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கென நடைபெறவுள்ள இத்தேர்தலின் மூலம் மொத்தம் 3542 உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படவுள்ளனர்.

## இடம்பெயர்ந்தோர் முகாம்கள் இடமாற்றம்

மல்லாகத்தில் உள்ள விசாலாட்சி வித்தியாலய கனிஷ்ட வித்தியாலயம்; றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றில் இயங்கிவந்த அகதி முகாம்கள் தற்சமயம் மல்லா...

மேலும் இவ் அகதிகளுக்கு சகல வசதிகளுடன் கூடிய ஓர் புதிய முகாம் ஒன்று அங்கு அமைக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-33)

## தொலைக் கல்விப் பயிற்சி நெறி

தமிழீழம் தந்த தலை சிறந்த ஞானிகளுள் செல்லப்பாச்சுவாமியாரையும் யோகர் சுவாமியையும் முக்கியமானவர்களாகக் குறிப்பிடலாம். யோகருக்குக் குரு செல்லப்பாச்சுவாமியார். ஆத்மவிடுதலைக்கு வழிகாட்டிகளாகிய இவர்களின் குருபூசைத் தினங்கள் முறையே இன்றும், இருபத்தாறாம் திகதியுமாகும்.

## நல்லூர்த் தேரடிச் செல்லப்பா சுவாமிகள்

ஈழத்துப் பெருஞ்சித்தராய சிவயோக சுவாமிகளை உருவாக்கியவர் நல்லூர்த் தேரடிச் செல்லப்பா சுவாமிகள். விசர்ச் செல்லப்பன் என்று பொதுமக்கள் கணித்தமை முழுதும் உண்மை.

இவர் 1915 ஆம் ஆண்டு பங்குனி மாதத்து அச்சுவினி நாளில் சமாதியானவர். அவருடையசீடர்கள் சிலர் அவர்காலத்திலேயே சமாதியடைந்தார்கள். செம்மணி வயலில் உள்ள சமாதியில் உறங்குபவர் ஒட்டுசுட்டான் சுவாமிகள்.

செல்லப்பா சுவாமிகள் வட்டுக்கோட்டை வல்லிபுரம் என்பவரின் மைந்தன், சகோதரி செல்லாச்சி. நல்லூரின் பிராமணக் குளத்தருகில் வயல்வேலை. செல்லப்பர் மதிய கல்லூரியில் படித்துக் கச்சேரியில் களஞ்சியப் பொறுப்பாளர் வேலை பார்த்தவர். உத்தியோகத்தில் இருந்தவாறே அகநோக்கில் ஈடுபாடுகொண்டவர். இதனால் புறநோக்கில் பைத்தியக் குணம் உண்டானது. நல்லூரில் உள்ள வயலோரத்து வீட்டு மூலையில் குந்தியிருப்பார் விடுப்பறியபோகிறவர்களைக் கண்டால் சரசரமாகக் கடின பதங்கள் கலந்த ஏச்சு.

இவ்வாறாக, கடைச்சாமியார் என வழங்கிய முத்தானந்த சுவாமிகள் நல்லூருக்குச் சென்ற வேளை ஒன்றில் இருவரும் சந்தித்தனர். கடைச்சாமியார் செல்லப்பரின் தலையில் தமது குடையை வைத்து தீட்சை புரிந்து, "தேரடியில் இரு" என்றார். மூலையில் இருந்தாரை முற்றத்தில் வைத்தவர் சாலப் பெரியர்" என்பது சித்தாந்தம். தேரடியில் முடங்கிக் கிடப்பதும், தமக்கையார் செல்லாச்சி உணவூட்டுவதும், ஒரு பகலெல்லாம் வருவார் போவாரை ஏசுவதும், சிரிப்பதும் முழு நேர வேலை.

நல்லூரில் அர்த்தசாமப் பூசை அக்காலத்தில் 8.30 வரை நடைபெறுதல் வழக்கம். அப்பூசை முடிந்ததும், ஆரவம் குறைந்து எங்கும் அமைதி. செல்லப்பர் மெதுவாகக் கோபுர வாசலில் குந்தியிருந்தவாறு முருகனோடு உரையாடுவர். முருகன் அகத்தியருக்கும், அருணகிரிநாதருக்கும் என்ன சொன்னார் என்பது தெரிந்ததே. அவ்வாறே முருகப் பெருமான் செல்லப்பாச் சுவாமிகளுக்கும் வேதம் உரைத்தார் என்பது செய்தி. நான்மறை எனத்தக்கவை அவை. நான்கு நவ வாக்கியங்கள். அவை:

ஒரு பொல்லாப்பும் இல்லை.
நாமறியோம், ஆரறிவார்.
எப்பவோ முடிந்த காரியம்.
முழுதும் உண்மை.

இவ்வாறாகக் கொழும்புத்துறையை வாழ்விடமாகக் கொண்ட யோக சுவாமிகள் என்னும் இளைஞர், செல்லப்பா சுவாமிகளின் பிரதம சீடராகி எல்லாம் அறிந்தார். நாம் இருவரும் ஓரிடத்தே இருத்தலாகாது. நீ எங்கேனும் ஓரிடம் பார் என்றார் குரு. எங்கே போவது என்று கேட்டார் சீடர். இலுப்பையடியைப் பார் என்றார் குரு. குரு வாக்கை பரிபாலனஞ் செய்த யோக குரு சுவாமிகள் கொழும்புத்துறையில் இலுப்பைச் சருகுகள் நிறைந்த முச்சந்திக் குப்பையிலே முடங்கிக் கிடந்தார். அந்த இடம் ஒரு பாவைவனப் பசுந்தரையாகும் எனத் தீர்க்க தரிசனம் கூறியவர். அவர் கூற்று இன்று நனவாகியுள்ளது.

## சிவயோக சுவாமிகள்

மாதந்தோறும் ஆயிலிய நாளில் தேரடியிலும் இலந்தொண்டன் நிலையங்களிலும் அன்னதானம் நடைபெறுதல் நாடறிந்த நற்பணி. ஆயிலிய நாளில் சமாதியடைந்த யோகசுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் பிரதமசீடர். செல்லப்பாசுவாமி...

## தொலைக் கல்விப் பயிற்சி நெறி

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறும் 89 —91 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் 90 — 92 கல்வியாண்டிற்கான பயிற்சி ஆசிரியர்களுக்கும் இம்மாதம் 23ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விசேட வகுப்புகள் நடைபெறவுள்ளன (ப-5)

றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றில் இயங்கிவந்த அகதி முகாம்கள் தற்சமயம் மலிலாகம் வட பிராந்திய போக்குவரத்துச் சபை வேலைத்தளக் கட்டிடத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் வேண்டுகோளிற் கிணங்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-33)

டத்தில் 01.06 89 ஆம் திகதி தொடக்கம் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (78)

## இந்தியத்தேர்தல் கடமைக்கு இருபது புதிய பொலிஸ் அணிகள்

இந்தியாவில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கடமை புரிவதற்கென இருபது விசேட பொலிஸ் அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த பொலிஸ் அணி ஒவ்வொன்றும் தலா ஆயிரம் பொலிஸ் படையினரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வன்செயல்களை அடக்குவதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் மற்றும் பராஇராணுவ அணியினருடன் இவர்கள் மேலதிகமாக பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

இது இவ்வாறிருக்க மேமாத தேர்தலுக்கென இந்தியா பூராவும் ஆறுலட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. தேர்தல் பணிகளுக்கு மொத்தம் எழுபது கோடிரூபா செலவு ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

## 'தற்காலிகதீர்வு எதையும்ஏற்கத் தயாராக இல்லை

## தமிழர் உரிமையை சிங்களமக்கள் உணரவேண்டும்'

'தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகப் பெரும் உயிர்ச்சேதங்களையும், பொருட்சேதங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வருவதினால் இனிமேல் எவ்விதமான தற்காலிகத் தீர்வையும் ஏற்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமப் பொறுப்பாளர் சுவாமி சித்ரூபானந்தா ஸ்ரீலங்கா பிரதமருக்கும், கொழும்பிலுள்ள முக்கிய வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

இந்த மகஜர் பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

'மனிதனின் உயிர் பெறுமதிமிக்கது. இதனை அரசு முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டும். தமிழ்மக்கள் தாம் உரிமையுடன் வாழ்வதற்கு நடவடிக்கையெடுக்க உரித்துடையவர்கள் என்பதையும், தமக்கென ஓர் அரசு அமைக்க அவர்களுக்கு உரிமையுண்டு என்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதனை ஏனைய கட்சிகளும், சிங்களமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் அவர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும்' என சுவாமி சித்ரூபானந்தா இந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளதுடன் தமிழ் மக்கள் கடந்த ஜுலைக்குப் பின்னர் அனுபவித்துவரும் அதிகத் துன்பங்கள் பற்றியும் மகஜரில் விவரமாகத் தெரிவித்துள்ளார். (16)

மாதந்தோறும் ஆயிலிய நாளில் நேரடியிலும் இலதொண்டன் நிலையங்களிலும் அன்னதானம் நடைபெறுதல் நாடறிந்த நற்பணி. ஆயிலிய நாளில் சமாதியடைந்த யோகசுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் பிரதமசீடர். செல்லப்பாசுவாமிகள் உருவாக்கிய யோகசுவாமிகள் கொழும்புத்துறை இலுப்பை மரத்தடியை ஒளிபெறச் செய்தபின் அயலில் அன்பர் இல்லத்தினருகில் கொட்டில் அமைத்ததும் அது கோவிலாயதும் ஒரு தனிவரலாறு.

பின்னர் சுவாமிகள் முன்னர் தம் குருநாதன் செல்லப்பா சுவாமிகளிடம் உபதேசவாயிலாகக் கேட்டறிந்த நான்கு மகாவாக்கியங்களையும் விரித்து நற்சிந்தனை என்னும் தலைப்பில் பல்வேறு யாப்பில் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடினார்கள். அவற்றை 1919 ஆம் ஆண்டு முதல் தம்மை நாடிவந்த சீடர்களுக்கு அருளிச் செய்தார். பின்னர், 1928 முதலாகச் சிவதொண்டன் என்னும் திங்கள் வெளியீட்டில் மலரச் செய்தார்.

சுவாமிகள் விளைவைப் பெருக்கவும், நெசவை அபிவிருத்தி செய்யவும், செந்தமிழை வளர்க்கவும், சைவத்தை உயர்த்தவும் அயராது உழைத்தார். பன்னிசை பரவுவதற்காகவும் புராண படனம் நிலைபெறவும் மௌன தவமாய அந்தர் யோகம் பரவவும் பலவகையில் முயற்சிசெய்தார்.

திருவருள் வழிபாட்டைத் திருவடி பூசை எனப் போற்றுமாறு பணித்தார். வண்ணார்பண்ணை, கொழும்புத்துறை, இளிநொச்சி, செங்கலடி ஆகிய இடங்கள் யோகர்சுவாமிகளின் திருவருட்களஞ்சிய பூமிகளாகும்.

சுவாமிகளுக்கு இங்கும் தமிழ் நாட்டிலும் அன்பர்கள் சீடர்களாக இருப்பதுபோல ஐரோப்பிய, கனேடிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய சீடர்களும் உள்ளார்கள். பாரத நாட்டுப் பெரும் பேராசிரியர்கள் தரிசனத்துக்காக வந்து உபதேசப் பேறும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

4 ஆம் பக்கம் பார்க்க

மாணவரின் மதிய உணவுக்கு

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு முற்பணம் வழங்கப்படும்

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுப் பொருள்களை பல நோ. கூ. சங்கங்கள் கொள்வனவு செய்ய முற்பணம் வழங்கப்படும்.

இந் நடவடிக்கைகளுக்கான 8 மில்லியன் ரூபா கட்டு நிதி சமூக சேவைத் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் இதற்காக வழங்கப்பட்ட பொருள்களுக்குரிய வவுச்சர்களை சமர்ப்பித்தால் அதற்குரிய பணமும் வழங்கப்படுமென சமூக சேவை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சமூக சேவைப் பிரிவால் வழங்கப்படும் ஏனைய பொது சன உதவிப் பணங்கள் திரவப்பணம் கிடைத்ததும் வழங்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (66)

## செயலகம் வழங்கிய காசோலை 90 நாள்கள் செல்லுபடியாகும்

யாழ் செயலகத்தினால் கடந்த ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்ட சகல காசோலைகளும் 90 நாள்கள் வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காசோலைகளை திரவப் பணமாக மாற்றுவதில் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதனால் இக்கால நீடிப்பை அமுல் படுத்துமாறு குடாநாட்டிலுள்ள சகல வங்கிகளையும் செயலகம் கேட்டுள்ளது. (66)

## முல்லைத்தீவு மாவட்டத்துக்கு குமண கப்பலில் உணவுப்பொருள்

பருத்தித்துறைக்கு வந்த குமணக்கப்பலில் முல்லைத்தீவுக்கும் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன. யாழ்மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் பணம் நோயாளிகளை இறக்கி விட்டு இக் கப்பல் முல்லைத்தீவை வந்தடைந்துள்ளது.

இக்கப்பலில் கொண்டுவரப்பட்ட யாழ் மாவட்டத்திற்கான உணவுப் பொருள்களை பறிப்பதற்கு இக் கப்பல் அடுத்த வாரம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். (38)

## இரு இலங்கைவங்கி கிளைகளுக்கு யாழ் மாவட்டத்தில் பரிசு

இலங்கை வங்கியின் திறமையான முகாமைத்துவத்திற்கான பரிசுத் திட்டத்தில் யாழ் மாவட்டத்தில் இதன் இரு வங்கிக்கிளைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1989 ஆம் ஆண்டிற்கான இப் பரிசுத்திட்டத்தில் இம் மாவட்டத்தில் மானிப்பாய்க் கிளை முதலாம் இடத்தையும், காங்கேசன்துறைக்கிளை இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இவற்றின் முகாமையாளர்கள், ஊழியர்களுக்கான இறப்புச் சான்றிதழ் கொழும்பில் கடந்த 9-ம் திகதி வழங்கப்பட்டது.

இலங்கை வங்கியில் காங்கேசன்துறை கிளை தற்பொழுது மானிப்பாயில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (70)

---

### உடுப்பிட்டி...

அண்மையில் வந்த 'லங்கா சிறி' கப்பலில் இச் சங்கங்களுக்கு பொருள்கள் வந்ததை யடுத்தே இவ்வாறு விற்கப்படுகிறது.

இதனையடுத்து இப் பகுதியில் தனியார் கடைகளில் விற்கப்பட்ட மேற்படி பொருள்களின் விலையும் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. (50)

---

★ கால்நடை வைத்திய அதிகாரி எச்சரிக்கை

# கிளிநொச்சியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய்தொற்றும் அபாயம்

கிளிநொச்சிப் பகுதியில் கால்நடைகளுக்கு "கால்வாய் நோய்" தொற்றக்கூடிய அபாயரே நிலை தோன்றியுள்ளதாக கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி புனிதம் தங்கராஜா எச்சரித்துள்ளார்.

இந் நோய்க்கான விரொக் கம்தாரி மருந்தை வெளிநாட்டு நிறுவனமான (oxfam) ஒக்ஸ்பாம் நிறுவனம் கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு இலவசமாக இன்றைய கால கட்டத்திலே வழங்கியுள்ளது. இந்த மருந்துக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகிறது.

கிளிநொச்சி தர்மபுரப் பகுதியில் தற்போது கால்நடைகளுக்கு கால்வாய் நோய் தொற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு வாயால் நீர் வடிதல், குளம்பில் புண்கள் ஏற்படுதல், உணவில் விருப்பமின்மை, இறுகன்கள் இறத்தல் போன்ற குறிகள் காணப்பட்டால் கால்வாய் நோய் ஏற்பட்டிருப்பது தெரியவரும்.

இப்படியான கால்நடைகளுக்குரிய மருந்துகிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படுமெனவும் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி தங்கராசா அறிவித்துள்ளார்.

இதனைக் கட்டுப்படுத்தா விடின் ஏனைய பகுதிகளுக்கும் இது தொற்றக் கூடிய அபாய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

யாழ். பெரியாஸ்பத்திரியில்

## நெருப்புக்காய்ச்சலால் நேற்று 150பேர் அனுமதி

யாழ் மாநகர சபை எல்லைக்குள் கடந்த இரண்டு மாதங்களில் நெருப்புக் காய்ச்சல் நோயினால் ஒருவர் உயிரிழந்ததாக சுகாதார போதனாசிரியர் எஸ். ஜெகநாதன் தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் 30 பேரும், நாவாந்துறைப் பகுதியில் 09 பேரும், அரியாலைபகுதில் 05 பேரும் ஏனைய பகுதியில் 07 பேருமாக மொத்தம் 51 பேர் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் யாழ் போதனா வைத்திய சாலையில் 150 க்கும் மேற்பட்டோர் நெருப்புக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொண்டாவில், உரும்பிராய், அரியாலை, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் சுகாதார வசதியற்ற அகதி முகாம்களிலும் இது வெகுவாக பரவி வருகின்றது.

இதனால் வைத்தியசாலையில் இடநெருக்கடி ஏற்படும் நிலைதோன்றியுள்ளது.74 70

---

### மண்டூர்...

னால் இவர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாது நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். (38)

---

### ரஞ்சன்...

இதேவேளை கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் தினமும் பல தமிழ இளைஞர்கள் விசாரணைகளுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர்.

சுமார் பதினைந்து தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காகத்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (38)

---

### கப்பலில்...

யாழ்ப்பாணத்தில் உள்ள ...

---

### 14 இலங்கை...

களைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இவ்வாறு மீன் பிடித்துக்கொண்டிருந்த போது இந்தியக் கடற்படையினரால் நான்கு படகுகளுடன் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இது குறித்து இந்திய மத்திய அரசுடன் பேச்சுநடாத்தி ஆவன செய்யப்படும் என தூதுவர் ஜா உறுதியளித்துள்ளார். (38)

---

### இனவிகிதாசார...

இனவிகிதாசார அடிப்படை மனித உரிமை, சமஉரிமை, சமவாய்ப்பு என்பவற்றுக்கு எதிரானது என்றும் தெரிவித்துள்ளது.

குடும்பக்கட்டுப்பாட்டில் உற்சாகம் காட்டின அரசு மறுபுறம் இனவிகிதாசாரத்தை அளவுகோலாகக் கொள்வது. ஒரு முரண்பாடான நிலைப்பாடு எனவும் ...

---

## புதிய பாதுகாப்பு இணையமைச்சரிடம் விமானத்தாக்குதலை நிறுத்துமாறு நவசமசமாஜக்கட்சி

வடபகுதியில் இடம்பெறும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதலை உடனடியாக நிறுத்தி அமைதியை அங்கு ஏற்படுத்துமாறு நவசமசமாஜக்கட்சி புதிய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜேதுங்காவிடம் கேட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற குண்டு வீச்சால் அநேகர் பலியாகியுள்ளதுடன் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தொடரும் யுத்தத்துக்கு இப்போது அல்லற்படும் மக்கள் பொறுப்பாளிகளாக முடியாது. அகதிமுகாம்களில் உள்ளவர்களும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் எனவே இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் நவசமசமாஜக்கட்சி கேட்டுள்ளது. (38)

## திறைசேரி கட்டுநிதி வந்துசேர்வதில் தாமதம்

யாழ் மாவட்ட நடவடிக்கைகளுக்காக திறைசேரியால் அனுமதிக்கப்பட்ட நிதிமூன்று கட்டங்களில் இங்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர்களதும் மற்றும் செயலகம் சம்பந்தப்பட்ட தேவைகளுக்குமாக ஆறு கோடி ரூபா இம்மாதம் 14, 21, 28 ஆகிய தினங்களில் அனுப்பி வைக்கப்படுமென திறைசேரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் இங்கு வந்து சேருவதற்கு தாமதமானதால் இம்மாதம் 14-ஆம் திகதி அனுப்பப்பட்ட பணம் இன்றும் வந்து சேரவில்லை எனவும் இதுவரை எந்தக்கட்டு நிதியும் கிடைக்கவில்லை எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (66)

## ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சி அதிக நேரம் ஒதுக்கப்படும்

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு கூடுதலான நேரம் ஒதுக்கப்படும் என தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஈழத்து நாடக இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ரூபவாஹினி கூட்டுத்தாபன இயக் ...

---

## துலாப்பட்டைக்கு கிராக்கி

தற்போது குடா நாட்டில் பெரும் பாலான விவசாயிகள் இறைப்பதற்கு துலாப் பட்டையை பாவித்து வரு ...

---

## காலமானார்

அப்பாத்துரை ரவிச்சந்திரன்

# காலமானார்

## அப்பாத்துரை ரவிச்சந்திரன்

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆவரங்காலில் வசித்தவருமாகிய அப்பாத்துரை ரவிச்சந்திரன் 17-03-91-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற இ. அப்பாத்துரை (பொலிஸ் உத்தியோகஸ்தர்) அன்னபூரணம் ஆகியோரின் மகனும், புவச்சந்திரன் (சுவிஸ்), வனஜா ஆகியோரின் சகோதரரும், வ. நடராசா, அன்னம்மா ஆகியோரின் பேரனும், ஏழுமலை நாதன் (சீமெந்துக் கூட்டுஸ்தாபனம்), ஆனந்தக்கதிரமலை, சிவலிங்கம் ஆகியோரின் மருமகனும், நாகபூரணம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, கண்ணகைமணி, தவமலர், புஸ்பமலர், ஆகியோரின் பெறாமகனும், ஆனந்த கிருஷ்ணன் அவர்களின் மருமகனும், இ கதிரவேலுவ் (இலங்கை பாராளுமன்றம்) பெறாமகனும். திருமதி சி. தங்கம்மா (இளைப்பாறிய ஆசிரியை) சு. அன்னமுத்து ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (செவ்வாய்க் கிழமை) பிற்பகல் 2-30 மணியளவில் ஆவரங்காலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆவரங்கால்,
வல்லியசிங்கம் வீதி,
10-ம் கட்டை.

சு. தருமகுலசிங்கம்

03086

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, லக்ஷ்மி பில்டிங்ஸில் உள்ள அச்சகத்தில் 19-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இளைஞர்கள் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (38)

### கப்பலில்...

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது பெண் சகாவுடன் கப்பலிலிருந்து இறங்கிச் சென்றுவிட்டார்.

கப்பலில் வந்த நோயாளிகளும், அதிகாரிகளும் கடல்நீர் மத்தியிலும் வெயிலிலும் வாடி பசியுடன் மிகவும்களைப்படைந்து விட்டனர். ஒருவர் கரைவந்ததும் மயங்கி விட்டார்.

மாலை 5.30 மணிக்கு ஒருவாறு கப்பலால் இறங்கிய இவர்கள் போக்குவரத்து வசதியின்றி பருத்தித்துறையில் அவதிப்பட்டனர். (ப-11)

இள்ளது.

குடும்பக்கட்டுப்பாட்டுக்கு உற்சாகம் காட்டின அரசு மறுபுறம் இனவிகிதாசாரத்தை அளவுகோலாகக் கொள்வது. ஒரு முரண்பாடான நிலைப்பாடு எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### அமைச்சரவை...

தெரிந்து கொண்டாராம்.

நான் கடமையில் இருந்த ஸ்ரீ கொத்தாவில் உள்ளூராட்சித் தேர்தல் விடயங்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். எனக்கே தெரியவில்லை என்று அமைச்சர் சொன்னபோது பத்திரிகையாளர்கள் தம்மிடம் புதிய அமைச்சர்களின் பெயர் விபரங்கள் உள்ளன என்றனர். (38)

### சிவயோகசுவாமிகள்...

அமெரிக்கப் பெரியார் ஒருவர் சுவாமிகளின் குரல் அந்நாட்டில் பரவும் வகை செய்து மெய்ஞ்ஞானம் போதித்து வருகிறார். ஆங்கிலப் பிரபு ஒருவர் வெண்ணாடை உடுத்தித் துறவுபூண்டு சுவாமிகளின நற்சிந்தனை என்னும் பெருஞானக் களஞ்சியத்தை நல்ல ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகமெல்லாம் பரவும்வகை செய்துள்ளார். சுவாமிகள் ஏச்சினாலும், பேச்சினாலும் கேட்டியே என்று தொடங்கும் இதமான உரையாடலாலும், ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வை வளம்படுத்தியுள்ளார். தேரடியில் நின்று தரிசித்தால் போதுமென்று நல்லூர்க் கந்தனை வழிபடச் செய்தார். கொப்பர் கோச்சியைக் கும்பிடு என்று ஏசிக் கலைத்து அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை நவநாகரிக மாந்தருக்குப் பழக்கினசர்.

— க. சி. குலரத்தினம் —

## துலாப்பட்டைக்கு கிராக்கி

தற்போது குடா நாட்டில் பெரும் பாலான விவசாயிகள் இறைப்பதற்கு துலாப்பட்டையை பாவித்து வருவதால் துலாப்பட்டைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது தற்போது ஒரு பட்டை 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (48)

### மாங்குளம்...

னர்.

இப்பகுதி வயல்களில் இராணுவத்தினரின் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தினால் வயல்களையும் செய்கை பண்ண முடியாத நிலையில் பலர் அவலமடைகின்றனர். (38)

### கொழும்பு...

களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், மாணிக்கப் பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை, முகத்துவாரம் ஆகிய இடங்களிலிருக்கும் அகதி முகாம்களில் இம்மதிப்பீடு நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

இவ்வகதி முகாம்களில் தற்போது 2500 பேர் தங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (38)

தெரிவித்துள்ளார்.

ஈழத்து நாடக இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ரூபவாஹினி கூட்டுத்தாபன இயக்குநர் சபையுடன் பேச்சு நடாத்தி ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் மேலும் சொன்னார். (38)

### இப்படியும்...

களுக்கான சான்றிதழ்கள் பாடசாலைகளுக்கு வந்திருப்பதைக் கேள்விப்பட்ட, இன்று குடும்பஸ்தர்களாக இருப்போர் பலர் தமது பிள்ளைகளுடன் பாடசாலைகளுக்குச் சென்று சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட காட்சி பாடசாலை மாணவர்களை சிரிப்பில் ஆழ்த்தியது. (12)

### மடு...

சமிக்ஞையை காட்டியதாக அகதிகள் தெரிவித்தனர். 45 நிமிடங்கள் இது நீடித்ததாகவும் இதன் இறுதியில் மக்கள் தங்களை வெளியேற்ற எந்த விதமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றை எதிர்த்து அங்கேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞையாக இதை உறுதியாக நம்பினர் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. 38